# Indian Polity Notes Part 6 in Tamil

## 6] அடிப்படை உரிமைகள்

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பகுதி – III, (மூன்றாவது பகுதி) சரத்துகள் 12 முதல் 35 வரை அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகிறது.
- அடிப்படை உரிமைகள் என்பன தனிமனிதனுக்கு மிகவும் அவசியமான உரிமைகள் ஆகும்.
- அடிப்படை உரிமைகள், உண்மையான மக்களாட்சி நிலவவும், அனைத்துக் குடிமக்கள் சமத்துவம் பெறவும் உதவுகிறது. இந்த உரிமைகள் அரசியல் அமைப்பு, சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது. தனிமனிதனின் முழு பாதுகாப்பு, முன்னேற்றத்திற்கு இது அவசியமாகிறது.

**அடிப்படை உரிமைகள் 6 வகைப்படும்**

1. சமத்துவ உரிமை (சரத்துகள் 14 – 18)

2. சுதந்திர உரிமை (சரத்துகள் 19 – 22)

3. சுரண்டலுக்கெதிரான உரிமைகள் (சரத்துகள் 23 – 24)

4. சமய சுதந்திர உரிமை (சரத்துகள் 25 – 28)

5. பண்பாடு மற்றும் கல்வியியல் உரிமைகள் (சரத்துகள் 29 – 30)

6. அரசியலமைப்பு தீர்வழிகள் பெற உரிமை (சரத்து – 32)

- சொத்துரிமை (Right to Property) சரத்து 19 (1) (f) ம், சரத்து 31 – ம் 44 – வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் நீக்கப்பட்டு சரத்து 300 – A – ன் கீழ் சரதாரண உரிமையாக சேர்க்கப்பட்டது.
- அடிப்படை உரிமைகளை பறிக்கும்படியோ அல்லது மீறும்படியோ ஒரு சட்டம் இயற்றப்பட்டால் அது செல்லாது என அறிவிக்கும் அதிகாரம் படைத்தது உச்சநீதிமன்றம் ஆகும்.

**சரத்து – 12**

- சரத்து 12 ஆனது அரசு (State) என்பதில் எவையெல்லாம் அடக்கம் என்று கூறுகிறது. இதில்
  1. இந்திய அரசாங்கம் மற்றும் நாடாளுமன்றம்
  2. மாநில அரசாங்கம் மற்றும் சட்டமன்றம்
  3. இந்திய ஆட்சி எல்லைக்குள் உள்ள உள்ளூர் அதிகார அமைப்புகள் (நகராட்சிகள், மாவட்ட வாரியங்கள், பஞ்சாயத்துக்கள், பிற அதிகார அமைப்புகள்)
  4. இந்திய அரசு அதிகாரத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அமைப்புகள்.

- சட்டத்தால் உருவாக்கப்பட்டதும், சட்டத்தால் அதிகாரமாளிக்கப்பட்டதுமான அனைத்து அதிகார அமைப்புகளும் இதில் அடங்கும்.

**சரத்து – 13**

- அடிப்படை உரிமைகளை மீறுமாறு சட்டம் ஏதேனும் இயற்றப்பட்டால் அது செல்லாது என்று சரத்து 13 கூறுகிறது.
- அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு, இந்தியாவில் நடைமுறையில் உள்ள சட்டம், பகுதி III – இல் உள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணாக அல்லது மீறுமாறு இருந்தால், எந்த அளவிற்கு முரணாக உள்ளதோ அந்த அளவிற்கு செல்லாது.
- இதில் "சட்டம்" என்பது அவசரச் சட்டம், ஆணை உபசட்டம், விதி, ஒழுங்குமுறை, அறிவிப்பு, வழக்கம் அல்லது வழக்காறு ஆகிய அனைத்தும் உள்ளடங்கும்.
- நடைமுறையில் உள்ள சட்டம் என்பது அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, இந்திய பரப்பெல்லையில் உள்ள அதிகாரம் வாய்ந்த அமைப்போ அல்லது சட்டமன்றமோ இயற்றிய சட்டம் மற்றும் அதை ரத்து செய்யாமல் இருக்கும் சட்டம்.
- சரத்து – 368 ன் கீழ் ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு பொருந்தாது (24 – வது அரசியமைப்பு திருத்த சட்டமியற்றலாம், ஆனால் அது அரசியலமைப்பின் கட்டமைப்பை மாற்றும் வகையில் இருக்கக்கூடாது. (கேசவானந்த பாரதி Vs கேரளா, 1973)

**1. சமத்துவ உரிமை (சரத்து 14 -18)**

**சமத்துவ உரிமை (சரத்து – 14)**

- அரசு, எந்தவொரு நபருக்கும் இந்திய எல்லைக்குள், சட்டத்தின் முன் சமம் மற்றும் சட்டங்கள் சம பாதுகாப்பை அளிக்க வேண்டும்.
- சட்டத்தின் முன் சமம் என்பது பிரிட்டனிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு எதிர்நிலை கருத்து ஆகும்.
- சட்டங்களானது சம பாதுகாப்பை வழங்க வேண்டும் என்பது அமெரிக்க அரசியலமைப்பிலிருந்து எடுக்கப்பட்ட நேர்மறையான கருத்தாகும்.
- சமமான சூழ்நிலைகளில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் (Equality among equals).
- நியாயமான அடிப்படையில் வகைப்பாடு செய்து கொள்வது அனுமதிக்கப்பட்டுள்ளது. உதாரணம், பெண்கள் பாதுகாப்பு சட்டம் போன்றவை.
- ஆனால் குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர், ஆகியோருக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி இவர்கள் மீது குற்றவியல் வழக்குகள் தொடர இயலாது, சிவில் வழக்குகள் தொடர வேண்டுமானால் 2 மாத அறிவிக்கை கொடுக்க வேண்டும்.

**பொது இடங்களில் சம உரிமை (சரத்து – 15)**

- அரசு, எந்தக் குடிமகனையும், மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றின் காரணமாக பாகுபடுத்தக் கூடாது.
- கடைகள் பொது மகிழ்மன்ற கூடங்கள், கிணறு, தொட்டி, குளிக்கும் இடங்கள், சாலைகள் அரசின் முழுமையான அல்லது பகுதியாக நிதியினால் செயல்படுத்தக் கூடிய அல்லது பொதுவாக பயன்படுத்த அர்ப்பணிக்கப்பட்ட இடங்களில் பாகுபாட்டுடன் நடத்தப்படக் கூடாது.
- எந்தக் குடிமகனும் அவன் சார்ந்துள்ள மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றின் காரணமாக பொது இடங்கள், உணவு விடுதிகள், கிணறு போன்ற இடங்களில் பாகுபாட்டுடன் நடத்தப்படக் கூடாது.
- 15(3), பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சிறப்புச் சட்டங்கள் இயற்றலாம்.
- 15 (4), சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின் தங்கியவர்களுக்கும், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு அவர்களை முன்னேற்ற தனிச் சலுகை அளித்து சட்டம் இயற்றலாம். (1 – வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் இணைக்கப்பட்டது, 1951)
- 15 (5) சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின் தங்கியவர்களுக்கும், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு அரசு உதவி பெறும் அல்லது அரசு உதவி பெறாத சரத்து 30 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களில் தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட சேர்க்கையில் தனிச் சலுகை அளித்துள்ளது.
- இது சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்குப் பொருந்தாது.
- (சரத்து – 15 (5), 93 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் இணைக்கப்பட்டது 2005)

**பொதுப்பணிகளில் சம வாய்ப்பு (சரத்து – 16)**

- பொதுப்பணிகளில் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது, சமயம், இனம், சாதி, பாலினம், இறங்குரிமை, பிறப்பிடம், உறைவிடம் இவற்றின் அடிப்படை தகுதி, சிறப்புத் தகுதி, தொழில்நுட்பத் தகுதி போன்றவைகள் இவ்வுரிமையை மீறுவது ஆகாது,
- இவ்வுரிமை இந்தியக் குடிமக்களுக்கு மட்டும் பொருந்தும்.
- ஒரு சில பணிகளை பிறப்பிடம் காரணமாக பணியமர்த்த நாடாளுமன்றம் வகை செய்யலாம்.
- பிறபட்ட வகுப்பினருக்கு தனிச் சலுகை வழங்கலாம்.
- பட்டியல் இனத்தவர், பழங்குடி இனத்தவர்களுக்கு பணி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும், 16 (4-A) 77 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் இணைக்கப்பட்டது – 1995).
- சமயம் சார்ந்த பணிகளுக்கு அந்த சமயம் சார்ந்தவர்களுக்கு மட்டும் ஒதுக்கலாம்

**தீண்டாமை ஒழிப்பு (சரத்து – 17)**

- சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினர்களின் நலனைப் பாதுகாத்தல்.

- தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது. மேலும் இது எந்த வடிவில் நடைமுறைப்படுத்தினாலும் அது தடை செய்கிறது. அவ்வாறு செய்தால் சட்டத்தின்படி தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும்.
- இதற்காக 1955 – ல் தீண்டாமை (குற்றங்கள்) சட்டத்தை இயற்றியது. பின்னர் இச்சட்டம் 1976 – ல் திருத்தப்பட்டு உரிமைகள் பாதுகாப்பு சட்டமாக (Protection of Civil Rights Act) நடைமுறையில் உள்ளது.

**சரத்து - 18**

- அரசு பட்டங்கள் வழங்குவதை தடை செய்கிறது.
- அரசு அனுமதியின்றி பெறும் இராணுவம் மற்றும் கல்வி தவிர பட்டங்களைத் தடை செய்தல்
- எனினும் இராணுவம், கல்வியில் சிறந்தவர்களுக்கு மற்றும் பாரத ரத்னா, பத்ம பூசன், பத்ம விபூசன், பரம்வீர் சக்ரா, தேசிய விருதுகள் போன்ற பட்டங்களை இப்பிரிவு தடை செய்யாது.
- இந்தியக் குடிமனாக உள்ள எவரும் வெளிநாடுகள் வழங்கும் பட்டங்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது.
- இந்தியக் குடிமகனாக இல்லாத ஒருவர், அரசின் கீழ் ஆதாயம் தரும் பதவியில் உள்ளபோது, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறாமல் வெளிநாடுகளில் இருந்து எந்தப் பட்டமும் பெறக் கூடாது.

**2. சுதந்திர உரிமை (சரத்து 19 - 22)**

**சுதந்திர உரிமை**

இது 6 வகையான சுதந்திரங்களை அளிக்கிறது.

இந்திய அரசியலமைச்சட்டப்பிரிவு 19 – ல் சுத்ந்திர உரிமைக்கு உத்திரவாதம் அதன் குடிமக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கிறது. அதன்படி,

**1. பேச்சு மற்றும் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் (சரத்து – 19 (1) (a))**

- பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தில் பத்திரிக்கைச் சுதந்திரமும் அடங்கும்.
- இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை, அரசின் பாதுகாப்பு, அண்டை நாட்டுடன் நட்புறவு, பொது ஒழுங்கு/அமைதி, ஒழுக்கம், நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு, குற்றம் செய்யத் தூண்டுதல் போன்ற நலன்களுக்காகக் கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.
- பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தில் தகவல் அறியும் உரிமையும் அடங்கும்.
- பேசாமல் அமைதியாக இருக்கும் உரிமையும் அடங்கும்.

**2. ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடுவதற்கான சுதந்திரம் (சரத்து – 19 (1) (b))**

- இந்தச் சுதந்திரம் இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை, பொது அமைதியின் நலனுக்குட்பட்டு கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

**3. கழகங்கள்/சங்கங்கள் கூட்டுறவு அமைப்புகள் அமைக்க சுதந்திரம் (சரத்து–19(1) (C))**

- இது பொது அமைதி அல்லது அறநெறியின் நலனுக்குட்பட்டும், இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறைமையின் நலனுக்குட்பட்டும் கட்டுப்பாடு விதிக்கலாம்.
- கூட்டுறவு அமைப்புகள் என்ற சொற்கள் 97 – வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் இணைக்கப்பட்டது (2011).

**4. இந்தியா முழுவதும் சென்றுவர சுதந்திரம் (சரத்து–19(1) (d))**

- இது பொதுமக்களின் நலன் மற்றும் பழங்குடியினரின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

**5. இந்தியாவின் எப்பகுதியிலும் தங்கி வாழும் சுதந்திரம் (சரத்து–19(1) (e))**

- இது பொதுமக்களின் நலன் மற்றும் பழங்குடியினரின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

**6. தொழில், பணி, வணிகங்கள் செய்யும் சுதந்திரம் (சரத்து–19(1) (g))**

- இதன் மீது நியாயமான தடையாகவும், பொதுமக்களின் நலனிற்குட்பபட்டதாகவும் இருக்கவேண்டும்.

ஆனால், ஒரு தொழில் செய்வதற்கு அல்லது பணிமுறை மேற்கொள்ள அல்லது வர்த்தகம் அல்லது வணிகம் செய்ய தொழில்கல்வி அல்லது தொழில்நுட்பக் கல்வித் தகுதி அவசியமாக இருந்தால், அதைப் பெற்றிருக்க வேண்டும்.

இந்த 6 வகையான சுதந்திரங்கள் நியாயமான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது.

**குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமைகள் (சரத்து – 20)**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் சரத்து – 20 – ன் படி ஒருவரைத் தகுந்த காரணமின்றி கைது செய்வதற்கு தடை விதிக்கிறது.
- குற்றஞ்சாட்டப்பட்ட செயல், செய்யப்பட்ட காலத்தில் நடைமுறையில் இருக்கும் சட்டத்தால் மட்டுமே தண்டிக்கப்பட வேண்டும்.
- நடைமுறையில் இருக்கும் சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகபட்ச தண்டனைக்கும் மேல் (அதிகமாக) விதிக்கக் கூடாது.

- எந்த நபரும் ஒரே குற்றத்திற்கு ஒருமுறைக்கு மேல் தண்டிக்கப்படக் கூடாது (Double Jeopardy)
- குற்றம் சாட்டப்பட்ட நபர் தனக்கே எதிராக சாட்சியம் அளிக்க வற்புறுத்தக் கூடாது. (Right against Self Incrimination) யாரையும் சுயவிருப்பமின்றி சாட்சியாக்க கட்டாயப்படுத்தக்கூடாது)

**வாழ்க்கை (வாழ்வு), தனிப்பட்ட சுதந்திரத்திற்கான பாதுகாப்பு (சரத்து – 21)**

- தனி மனித வாழ்வு மற்றும் தனி மனிதச் சுதந்திரத்தை உறுதி செய்கிறது. தனது சுதந்திரத்தினை, மற்றவர்களின் சுதந்திரம் பாதிக்கப்படாத வகையில் அனுபவிக்க வேண்டும்.
- ஒரு நபரின் வாழ்க்கையையும், தனிநபர் சுதந்திரத்தையும் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளின் (Procedure established by law) தவிர வேறு வழிகளில் மீறக்கூடாது.
- **A.K.** கோபாலன் **VS.** சென்னை (1950) என்ற வழக்கில் சரத்து 21 – ல் கூறப்பட்டுள்ள சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளில் இயற்கை நீதிக் கோட்பாடுகளை (Principles of Natural Justice) உள்ளடக்காது என்று உச்சநீதி மன்றம் சொன்னது.
- மேனகா காந்தி VS இந்திய அரசு, (1978) என்ற வழக்கில் தனிப்பட்ட சுதந்தரம்  என்கிற பதத்திற்கு பரந்தப் பொருள் விளக்கத்தையும், சட்டத்தால் ஏற்ப்படுத்தப்பட்ட நடைமுறைகளுள் இயற்கை நீதிக் கோட்பாடுகளும் அடங்கும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்து.
- வாழும் உரிமை, தனிமனித உரிமை மற்றும் பல அடங்கும் .வாழ்வுரிமை என்பது மாண்புடனும் மரியாதையுடனும் வாழ்வது, பிழைப்புத் தொழில் **(Livilihood),** சுகாதார மற்றும் மாசற்ற சூழலில் வாழும் உரிமையும் அடங்கும்
- விசாரணைக் கைதிகளாக நீண்ட நெடுங்காலமாக சிறையில் வைத்திருப்பது சரத்து 21 – ஐ மீறுவதாகும்.
- பெண்கள், “குழந்தை பெற்றுக்கொள்வது” தொடர்பானவையும் தனிமனித சுதந்திரத்தில் அடங்கும்.
- தனித்திருப்பு உரிமை **(Right to Privacy)** என்பது தனிப்பட்ட சுதந்திரத்தில் அடங்கும்.
- வாழும் உரிமை சாவதற்கான உரிமையை உள்ளடக்காது.

**கல்வி உரிமை (சரத்து 21 – A)**

- 2002,86 – வது அரசியல் சட்டத்திருத்தத்தின் மூலம் இணைக்கப்பட்டது.
- அரசு, 6 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும்.
- பள்ளிகளில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களும், அடிப்படை கட்டடைப்புகளும் இருப்பது அவசியம்.
- கல்வி உரிமை என்பது பொருளாதார, சமூக , பண்பாட்டு பாகுபாடு இல்லாமல் தரமான கல்வியை பெறும் உரிமை ஆகும்.

- 2009 இல் இலவசக் கட்டாயக் கல்வி 6 வயதிலிருந்து 14 வயதிற்குட்பட்டவர்களுக்கு அளிக்க சட்டம் வெளியிடப்பட்டுள்ளது.
- இது 01.04.2010 முதல் நடைமுறைக்கு வந்தது.

**கைது செய்தல், சிறை வைத்தலுக்கு எதிரான பாதுகாப்பு (சரத்து – 22)**

- இந்திய அரசியலமைப்பு சரத்து 22 –ன்படி எவரையும் விசாரணையின்றி கைது செய்யக்கூடாது.
- மக்களை விசாரணையின்றி கைது செய்யப்படும் போது, பாதுகாப்பு அளிப்ப தோடல்லாமல் கைது செய்வதற்கான காரணத்தைத் தெரிவிக்கும்படி கேட்கவும் உரிமையை அளிக்கிறது.
- சட்ட வல்லுநர்களை கலந்தாலோசிக்கவும், கிரிமினல் வழக்குகளில் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் நீதிபதி முன் ஆர்ஜர்படுத்தவும் பாதுகாப்பு அளிக்கிறது.
- ஒருவரைக் கைது செய்யும் போது கைதுக்கானக் காரணத்தை தெரிவிக்க வேண்டும், மேலும் வழக்குரைஞரை அமர்த்துவதற்கும் உரிமை உண்டு.
- தடுப்புக் காவல் சட்டத்தின்படி சிறைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு சரத்து 14, 19,21 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள உரிமைகளை மீறக்கூடாது.
- தடுப்புக் காவலில்3 மாதங்களுக்கு சிறைபடுத்தும் வகையில் இருந்ததை 1978-ம் ஆண்டின் 44 – வது சட்டத்திருத்ததிற்கு பிறகு 2 மாதங்களாகக் குறைக்கப்பட்டது.
- ஆனால் கைது செய்யப்பட வேண்டிய நபர் அன்னிய எதிரி அல்லது தடுப்பு காவல் முறையில் இருந்தால் இந்த உரிமை கிடையாது.
- **A.K Roy vs Union of India (1982)** என்ற வழக்கு **National Security Act Case** என்றழைக்கப்படுகிறது.

**3. சுரண்டலுக்கெதிரான உரிமை (சரத்து 23 – 24)**

**சரத்து - 23**

ஒருவரைக் கட்டாயமாகவே அல்லது ஊதியமின்றியோ வேலை செய்ய வைத்தல் கூடாது.

இதன்படி அடிமை முறை, மனித இழிதொழல் வாணிகம், (பெண்கள், குழந்தைகள், விபச்சாரம்). **(beggar)** எனப்படும். ஊதியம் இல்லா உழைப்பை வாங்குவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறன் உடையவர்களையும் (ஊனமுற்றோர்) பயன்படுத்தக்கூடாது.

பொது நோக்கத்திற்காக கட்டாய சேவைக்கு அரசு ஊதியமின்றி அழைக்கலாம். ஆனால் அது மதம், இனம், சாதி, வகுப்பு அல்லது இவற்றில் ஏதேனும் பாகுபாடுவதாக இருக்கக் கூடாது.

**சரத்து – 24**

14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை தொழிற்சாலை, சுரங்கம் மற்றும் அபாயகரமான பாதுகாப்பற்ற பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது.

**4. சமய சுதந்திர உரிமை (சரத்து 25 – 28)**

**சரத்து – 25**

நமது அரசியலமைப்பு இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் சமய சுதந்திரத்தினை அளிக்கிறது. எல்லா சமயங்களும் ஒரே மாதிரியாகக் கருத வேண்டும்.

- இந்தியாவில் வாழும் அனைத்து மக்களும் தங்கள் மனத்திற்கு உகந்த சமயங்களை சார்ந்து வாழவும், நெறிமுறைகளை கடைபிடிக்கவும், பரப்பவும் சுதந்திரம் அளிக்கிறது. இச்சுதந்திரத்திற்கு பொது அமைதி, ஒழுக்கம், சுகாதாரம் அறநெறி போன்ற காரணங்களுக்காக கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.
- ஆனால், மத நடைமுறை தொடர்பான பொருளாதார,நிதி,அரசியல் அல்லது பிற மதச்சார்பற்ற நடவடிக்கை தொடர்பாக ஒழுங்குபடுத்த அல்லது தடை செய்ய சட்டம் இயற்றலாம்.
- சமூக நலன் மற்றும் சீர்த்திருத்தம் செய்ய வகைசெய்யும் வகையில் இந்து சமய நிறுவனங்களை இந்து மதத்தில் உள்ள அனைத்து பிரிவினருக்கும் மற்றும் அனைத்து வகுப்பினருக்கும் பயன்படும் வகையில் சட்டம் இயற்றலாம்.

**சரத்து – 26**

- ஒவ்வொரு சமயமும் அற நோக்கங்களுக்காகவும், மேலாண்மை செய்யவும், சொத்துக்களை நிர் வகிக்கவும் உரிமை உண்டு.
- மத அலுவல்களை மேற்க்கொள்ளும் சுதந்திரம்.
- மதம் மற்றும் அற நோக்கங்களுக்காக நிறுவனங்களை உருவாக்கவும் நிர்வகிக்கவும் உரிமை உண்டு.
- மதம் தொடர்பான விவகாரங்களை நிர்வகிக்கலாம்.
- அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை சொந்தமாக பெறவும் உரிமை உண்டு. அச்சொத்துக்களை சட்டத்திற்கு உட்பட்டு நிர்வாகம் செய்யலாம்.
- பொது ஒழுங்கு, அறநெறி மற்றும் நலன் அல்லது சுகாதாரம் போன்ற காரணங்களுக்காக கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

**சரத்து – 27**

- சமயத்திற்கு வரி விதிப்பதைத் தடை செய்யும் சரத்து 27.

- குறிப்பிட்ட மதம் அல்லது மதம் தொடர்பானவற்றை உயர்த்த அல்லது நிர்வகிக்க செலவு செய்யும் பணத்திற்கு வரி செலுத்தச் சொல்லி எந்தவொரு நாபரையும் கட்டாயப்படுத்தக் கூடாது.

**சில கல்வி நிறுவனங்களில் மத அரிவுரைகள் / மத வழிபாடு தொடர்பான சுதந்திரம் (சரத்து – 28)**

- இந்தியா ஒரு சமயச் சார்பற்ற அரசு ஆகும். எனவே அரசின் உதவியை முழுமையாக பெற்று கல்விப் பணிபுரியும் நிறுவனங்களில் சமய போதனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
- அரசால் நிர்வகிக்கப்படும் ஆனால் அந்த நிறுவனம் மதநெறிகள் தொடர்பான நிறுவனமாக இருந்தால் போதனை செய்யலாம்.
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசு நிதி பெறக் கூடிய கல்வி நிறுவனங்களில் மத போதனையில் கலந்து கொள்ளவோ அல்லது மத வழிபாட்டில் கலந்துகொள்ளவோ கட்டாயப்படுத்தக் கூடாது.

**5. பண்பாட்டு மற்றும் கல்வியியல் உரிமைகள்**

**சிறுபான்மையினரின் நலன்கள் பாதுகாப்பு (சரத்து – 29)**

இந்தியாவில் வாழும் எந்த வகுப்பு குடிமக்களும் தனி மொழி, எழுத்து முறை அவர்களுக்கொன்று பண்பாட்டு ஆகியவற்றை பாதுகாக்கும் உரிமை பெற்றுள்ளனர்.

அரசால் நடத்தப்படக் கூடிய அல்லது அரசு நிதி உதவி பெறும் எந்த கல்வி நிறுவனமும் மதம், இனம், சாதி, மொழி அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் காரணமாக குடிமகனுக்கு சேர்க்கை மறுக்கப்பட்டக் கூடாது.

**சிறுபான்மையினர் கல்வி நிறுவங்களை நிறுவ மற்றும் நிர்வகிக்க உரிமை (சரத்து – 30)**

சிறுபான்மையினராக உள்ள அனைத்து குடிமக்களும் சிறுபான்மையினராக உள்ள அனைத்து குடிமக்களும் மொழி, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் எல்லோருக்கும் பண்பாட்டைப் பாதுகாக்க கல்விக்கூட்டங்கள் நிர்வகிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

மத அல்லது மொழி சிறுபான்மையினரால் நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனம் என பாகுபடுத்தி அரசு நிதி வழங்க மறுக்கக் கூடாது.

**6. அரசியலமைப்பு தீர்வழி உரிமை (சரத்து – 32)**

- அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது, நேரடியாக மக்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து பாதுகாப்பினைப் பெற உதவுகிறது.
- ஒரு நபரின் அடிப்படை உரிமை மீறப்பட்டால் அல்லது மாறுக்கப்பட்டால் அவர் நேராக உச்சநீதிமன்றத்திற்கு செல்லலாம் என்று ஆன்மா என்று டாக்டர். அம்பேத்கர் குறிப்பிட்டார்.

- அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன் உச்சநீதிமன்றம் ஆகும்.
- உச்சநதிமன்றம் நீதி ஆணைகள் / நீதிப்பேராணைகள் மூலம் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கிறது.
- அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் நீதிப் பேராணைகள் (Writs) வழியாகத் தீர்வழி பெறுவது ஒரு அடிப்படை உரிமையாகும்.
- உச்சநீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு குந்தகம் இல்லாமல்,(நாடாளுமன்றம்) அதிகாரங்களை வேறு நீதிமன்றத்திற்கு அதன் வரம்பிற்குட்பட்டு செயல்பட சட்டம் இயற்றலாம்.
- இந்த சரத்தில் வழங்கப்பட்ட உரிமையை, அரசியலமைப்பினை வழிமுறைகள் தவிர வேறு வகையில் ரத்து செய்ய முடியாது.
- அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் அடிப்படை கடமைப்பின் ஒரு பகுதியாகும்.
- அடிப்படை உரிமைகளை வழங்குவது நாட்டின் பொதுக் கொள்கையாகும்.
- சரத்துகள் 15, 16, 19, 29, 30 –ல் உள்ள அடிப்படை உரிமைகள் இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே கிடைக்கும். மற்ற உரிமைகள் குடிமக்களுக்கும், குடிமக்கள் அல்லாதவர்களுக்கும் கிடைக்கும்.
- சரத்துகள் 14, 15(1), 16, 18(1), 19, 20, 21, 22, 25, 26, 27, 28, 29, 30 ஆகியவற்றில் உள்ள அடிப்படை உரிமைகள் அரசுக்கெதிராக மட்டுமே கிடைக்கும்.
- சரத்துகள் 15 (2), 17, 23 (1), 24 ஆகிய அடிப்படை உரிமைகள் அரசுக்கெதிராகவும், தனிப்பட்ட நபர்களுக்கு எதிராகவும் கிடைக்கும்.
- அடிப்படை உரிமைகள் முழுமையானதல்ல, அவைகள் வரம்புகளுக்கு உட்பட்டது. சரத்துகள் 31-A, 31-C, 33, 34, 358, 359 ஆகியவை அடிப்படை உரிமைகள் மீது வரம்புகளை விதிக்கின்றன.
- உச்சசீதிமன்றத்தின் அதிகாரத்தை பாதிக்காத வகையில்,நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் ஏதேனும் மற்ற நீதிமன்றம் அவர்களின் அதிகார வரம்பிற்குள் செயல்பட அதிகாரமளிக்கலாம்.
- அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் சரத்து 32 – ஐ நீக்க முடியாது.

**நீதிப்பேராணைகள் (Writs)**

**1. ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writ of Habeas Corpus)**

- சிறைப்பிடித்து வைக்கப்பட்டவரை விடுவிக்க இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது. சட்டத்திற்குப் புறம்பாக கைது செய்வதிலிருந்து மக்களைப் பாதுக்கிறது.

**2. செயலுறுத்தும் நீதிப்பேராணை (Mandamus)**

பொதுக் கடமையான ஒரு செயலை செயல்படுத்தும் ஒரு அதிகாரி அல்லது கூட்டமைப்பு அக்கடமையைச் செய்யத் தவரினால் இவ்வாணை பிறப்பிக்கப்படும்.

விண்ணப்பத்தாரர்களுக்கு சட்ட உதவி அளித்து, பொது சொத்தை பாதுகாக்கிறது.

**3. தடையுறுத்தம் நீதிப்பேராணை (Prohibiton)**

கீழ் நீதிமன்றமோ, ஆட்சி அதிகாரியோ தம் அதிகார வரம்பினை மீறி அல்லது முரணாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அதை தடை செய்யும்.

- துணை நீதிமன்றங்கள் வரம்பு மீறி செயல்படுவதை தடை செய்கிறது.

**4. நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை (Certiorari)**

நீதிமன்றமோ, தீர்ப்பாயங்களோ, அதிகாரிகளோ தம் அதிகார வரம்பை மீறி செயல்பட்டாலோ அல்லது அறமுறைக்கு மாறாக நடவடிக்கை எடுத்தாலோ இவ்வாணை பிறப்பிக்கப்படும்.

- துணை நீதிமன்றங்களிள் வரம்பு மீறி வெளியிடும் ஆணைகளை நீக்குதல்

**5. தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Quo Warranto)**

பொது அதிகாரப் பதவியில் உள்ள ஒருவரை அவர் எத்தகுதியில் அப்பதவி வகிக்கிறார் என்று வினவப்படும் ஆணையாபும்.

- பொது அலுவலகங்களை ஆக்கிரமிப்பு செய்வதை தடை செய்தல்.

ஒருவரின் அடிப்படை உரிம மீறப்பட்டால் தான் சரத்து – 32 ன் கீழ் உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பிக்கும். ஆனால் அடிப்படை உரிமை மற்றும் சாதாரண உரிமைகள் மீறப்பட்டாலும் உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கும் எனவே உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரமானது உச்சநீதிமன்றத்தின் அதிகாரத்தை விட பரந்தது எனலாம்.

**சரத்து - 33**

இராணுவம், பொது அமைதியை காக்கும் பணியில் உள்ளவர்களுக்கும், மேலும் இவர்களோடு தொடர்புடைய தொலைத் தொடர்பு பணியாளர்களுக்கு அடிப்படை உரிமைகள் பொருந்தும் தன்மையை நாடாளுமன்றம் தீர்மானிக்கும்.